INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## PRESS RELEASE

### திகதி வரை தடையாணை

திகதி: 23 February 2023
நேரம்: 12:01 AM Sri Lanka Time

### மேலும் தகவல்களுக்கு அணுகவும்

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at' ihp.lk


### பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at' ihp.lk Twitter: @ravirannaneliya

# வாக்காளரிடையே நெருக்கமான போட்டியில் என்.பி.பி./ஜே.வி.பி மற்றும் எஸ்.ஜே.பி.

## *IHP MRP வாக்களிப்பு தீர்மானம் ஜனவரி 2023 மதிப்பீடு.*


ஜனவரி 2023 இல் நடத்தப்பட்ட இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின் (SLOTS) அன்மித்த வாக்கெடுப்பில் வாக்களிக்கக்கூடியவர்களின் பொது தேர்தல் வாக்களிப்பு தீர்மானம் மதிப்பீடு செய்யப்பட்டது. இதன்படி வாக்களிக்கக்கூடியவர்களின் பொது தேர்தல் வாக்களிப்பு தீர்மானத்தை பொருத்தவரை, டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் என்.பி.பி./ஜே. வி. பி.க்கு இருந்த ஒரு எழுச்சியை தொடர்ந்து என்.பி.பி./ஜே. வி. பி. மற்றும் எஸ்.ஜே.பி. முறையே 32% மற்றும் 31% பெற்று நெருக்கமான போட்டியில் உள்ளனர். இரு கட்சிகளும் எஸ்.எல்.பி.பி., யூ. என். பி. மற்றும் எஸ்.எல்.எப்.பி. க்கு முன்னணியில் உள்ளனர், ஆனால் இருவருக்கும் இடையேயான வேறுபாடு பிழை விளிம்பிற்குள் உள்ளது.




2022 ஜூலை இல் ரணில் விக்ரமசிங்க பதவியேற்றது முதல் எஸ்.ஜே.பி. நிகர மூன்று புள்ளிகளையும், என்.பி.பி./ஜே. வி. பி. ஒரு புள்ளியையும், யூ. என். பி. ஐந்து புள்ளிகளையும் பெற்றனர் என்று IHP இன் வாக்களிக்கக்கூடியவர்களின் MRP பகுப்பாய்வு சுட்டிக்காட்டுகிறது. எஸ்.எல்.பி.பி. யின் ஆதரவு 11 புள்ளிகள் வீழ்ச்சி அடைந்தது தான் இந்த அதிகரிப்புக்குக் காரணம்.

## **IHP SLOTS** பொது தேர்தல் வாக்களிப்பு தீர்மானம் தொடரி (அநேகமாக வாக்களிக்கூடியவர்கள் %)


இன்று பொது தேர்தல் நடந்தால், எந்த கட்சிக்கு வாக்களிப்பீர்கள்?




சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு **MRP**

ஆகஸ் 31 2021-பிப் 16 2023 வரை நடத்தப்பட்ட 9,710 நேர்காணல்களின் அடிப்படையில் மாதாந்திர மதிப்பீடுகள். மதிப்பீடுகள் **IHP** இன் **MRP model** கொண்டு தேசிய ஜனத்தொகையோடு பொருந்த கணக்கிடப்பட்டன. மேலும் மாதம் மற்றும் கட்சியை பொருத்து பிழை விளிம்பு 2-5% மதிப்பிடப்பட்டது.

பொதுத் தேர்தல் வாக்களிப்பு தீர்மானத்தை மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பின் பிரதிபலிப்பதாக எடுத்துக்கொண்டால், ஜனவரி SLOTS கருத்துக்கணிப்பின்படி தற்போதைய போக்கு பெரும்பாலான உள்ளூராட்சிகள் மற்றும் வார்டுகளில் அதிகமான வாக்குகள் எஸ்.ஜே.பி.மற்றும் என்.பி.பி./ஜே. வி. பி.க்கு செல்லும் என்பதை காட்டுகிறது. இருப்பினும், பெரும்பாலான உள்ளாட்சி அமைப்புகள் அநேகமாக பிளவுபட்ட கட்டுப்பாட்டில் முடிவதோடு, எந்தக் கட்சியும் பெரும்பான்மையைப் பெறாது. எஸ்.ஜே.பி. மற்றும் ஐ. டி. எ. கே. ஆகியவை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் என்.பி.பி./ஜே. வி. பி. யை விட முன்னணியில் இருப்பர், ஆனால் என்.பி.பி./ஜே. வி. பி. மேற்கு, தெற்கு, வடமத்திய மற்றும் சபரகமுவ மாகாணங்களில் எஸ்.ஜே.பி. யை விட முன்னணியில் இருக்கும், மேலும் கிராமப்புறங்களிலும் முடிவுகள் சிறப்பாக இருக்கும். அதே நேரத்தில் எஸ்.ஜே.பி.க்கு நகரப்புற மற்றும் நகராட்சி மன்றங்களில் முடிவுகள் சிறப்பாக இருக்கும்.




IHP இன் பிரதான ஆய்வாளரும் நிர்வாக இயக்குநருமான டாக்டர் ரன்னன்-எலிய கருத்துத் தெரிவிக்கையில், “இது 2018 உள்ளாட்சித் தேர்தலில் இருந்து மிகப்பெரிய மாற்றமாக இருக்கும். இதற்கு முக்கிய காரணிகள் எஸ்.எல்.பி.பி வாக்குகளில் சரிவு, மற்றும் எஸ்.எல்.பி.பி. கட்சியிலிருந்து மாறிய வாக்காளர்களை என்.பி.பி/ஜே.வி.பி எஸ்.ஜே.பி-யை விட அதிகமாக வெல்வது, மற்றும் 2020 பொது தேர்தலில் அவர்கள் பெற்ற வாக்குகளை தக்க வைத்துக்கொண்டதும் தான்.

பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களிடையே என்.பி.பி./ஜே. வி. பி. எஸ்.ஜே.பி.ஐ விட தெளிவாக முன்னணியில் இருப்பினும், எஸ்.ஜே.பி. ஆதரவாளர்கள் வாக்களிக்கும் சாத்தியம் அதிகம், இது அவர்களுக்கு இடையேயான சாத்தியமான வாக்காளர்களில் வித்தியாசத்தை 2% குறைக்கிறது.

முழு அறிக்கை ihp.lk இலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, February 2023, “NPP/JVP and SJB running neck-and-neck amongst voters: IHP MRP Voting Intentions Estimates January 2023”, SLOTS Report #2023-03. Available at http://ihp.lk/publications/docs/SLOTSReport202303.pdf.

## IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட்

பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

**முறை**

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின்(18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்காணல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. வாக்களிப்பு தீர்மானத்தை Multilevel Regression and Post-Stratification (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்தது. இந்த உடன் தொடர்பு முறை குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பதை மதிப்பீடு செய்ய அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்துகிறது.

ஜனவரி 2023க்கான MRP மதிப்பீடுகள் ஜனவரி 2023 இல் நடத்தப்பட்ட 724 நேர்காணல்கள் மற்றும் ஆகஸ்ட் 31 2021-பிப்ரவரி 16 2023 வரை நடத்தப்ட்ட 9,710 நேர்காணல்களின் மொத்தத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. மேலும் முன்னணி கட்சிகளுக்கு பிழை விளிம்பு 2-3% என்று மதிப்பிடப்பட்டது.

MRP என்பது மற்ற நாடுகளில் உள்ள வாக்கெடுப்பு நிறுவனங்களால் சிறிய கூறுகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு அதிகமாக உபயோகப்படுத்தப்படும் ஒரு முறையாகும். குறிப்பாக YouGov, UK Brexit வாக்கெடுப்பு மற்றும் சமீபத்திய UK பொதுத் தேர்தல்களின் முடிவுகளை முன்னறிவிக்கப் பயன்படுத்தியது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, பொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

நிதியுதவி

இலங்கையில் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR) ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் SLOTS ஆய்விற்கு நிதியுதவி அளித்துள்ளனர். ஆனால் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.